# தாய்

**பெற்ற தாய்தனை மகமறத் தாலும்**
**பிள்ளை யைப் பெறுந் தாய் மறந்தாலும்...**

என்று திருஅருட்பிரகாச வள்ளலார் எழுதுகிறார். உலகரிடையே எத்தனையோ விதிகள் இருந்தாலும் சில இடங்களில் சிலர் அதை மீறுவதுண்டு. இந்தப் பாடலில் வள்ளலாரின் குறிக்கோள் என்ன எனப் பார்க்கும் போது நமசிவாயத்தை நான் மறவேனே என்பதை சொல்ல விழைந்தது தெரிகிறது. ஆனால் பேருபதேசம், உரைநடைப் பகுதிகளில் நான் சைவத்தில் வைத்திருந்த பற்று இவ்வளவு என்று சொல்ல முடியாது. ஆனால் என்னை அது மேலேற்றி விடவில்லை. அப்போது எனக்கு அற்ப அறிவாக இருந்தது. என்னை ஏறாநிலை மிசைக்கு ஏற்றி வைத்தது **தயவு** ஒன்றுதான் என்கிறார்!

மேற்சொன்ன பாடலில் "பெற்ற தாய்தனை மக மறந்தாலும், பிள்ளையைப் பெறுத் தாய் மறந்தாலும், உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும், உடலை மேவிய உயிர் மறந்தாலும், கற்ற நெஞ்சங் கலை மறந்தாலும், கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்" என்று ஆறுவிதமான நித்தியங்கள் அநித்தியமானாலும் கூட நற்றத்தவர் உள்ளிருந்து ஓங்கும் நமசிவாயத்தை நான் மறவேனே என்ற உறுதிப்பாடு நித்தியமானது என்கிறார் வள்ளலார்.

சூரியன் கிழக்கில் உதிக்கிறது. இது மேலோட்டமான உண்மை. ஆனால் அது உதிப்பதுமில்லை, மறைவதுமில்லை. பூமிதான் மேற்கிலிருந்து கிழக்காக சுற்றுகிறது என்பது அப்பட்டமான உண்மை. இது யதார்த்தம் எனப்படும். (Reality / Actuality) எனவே இந்தப்பாடலை பார்க்கும்போது, பல குடும்பங்களில் பெற்ற தாயை, பிள்ளைகள் மறந்து விடுகின்றனர் என்பது யதார்த்தம், இது இப்போது புதிதாக நடக்கவில்லை. வள்ளலார் காலத்திலும் அதற்கு முன்பும் நடந்திருக்கிறது. இன்றைக்குப் பெற்றோரைக் கைவிடும் பிள்ளைகளின் மீது வழக்கு தொடரலாம் என்று சட்டம் இருக்கிறது. சட்டத்தை மீறுபவர்கட்கு தண்டனையும் உண்டு. இது நாம் பார்க்கும் செய்தி. ஆனால் அல்லலுறும் ஆயிரம் பெற்றோர்களில் ஏதோ ஒருவர் வேண்டுமானால் வழக்கு தொடுத்திருக்கலாமே தவிர, அதற்கு மேலிருக்க வாய்ப்பில்லை. தாய்மார்கள் தன் பிள்ளை மீது வழக்கு தொடுப்பது அபூர்வம். காரணம் அவள் தாய்!. தன் மகனை எந்த விதத்திலும் தனிமைப்படுத்தவோ, இன்னல்படுத்தவோ, பிறர் முன்னால் தாழ்மைப்படுத்தவோ விரும்புவதேயில்லை. ஈன்றெடுத்து பல்லாண்டுகள் ஆனாலும் அவனைத்தான் நெஞ்சிலும், நினைவிலும் அவள் சுமந்து கொண்டே இருப்பதுதான் அதற்குக் காரணம். பரவாயில்லை, பட்டினி கிடக்கிறேன். வீட்டை விட்டுத் துரத்தினால் என்ன? அனாதை விடுதிகள், மரத்தடி நடைபாதை, பஸ் நிலையம், கோயில் வாசல், கடைவீதிகளில் வாழ்ந்து கொள்கிறேன். என் மகன், அவன் குடும்பம் மகழ்ச்சியாயிருக்கும் செய்தியை அன்றாடம் கேட்டு ஆனந்தமாய் உறங்குகிறேன், என்று எண்ணற்ற தாய்மார்கள் நம் கண் முன்னே வாழ்கின்றனர்.

அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சென்றவளை மருத்துவர் "பிள்ளை யாரும் வரலியாம்மா? தனியே இப்படி தள்ளாடி வர்றியே வீடு எங்கே இருக்கு" எனக் கேட்டார். அதைக் கேட்ட வாட்ச்மேன் "டாக்டரய்யா இந்த தெருவில் தான் புள்ள இருப்பது இந்த அன்னையின் இல்லம். இந்த அன்னை இருப்பதோ அனாதை இல்லம். அவரு வரமாட்டாரு. நாளைக்கு' விழாவுல பேசுறாரே அவர்தாங்க இவர் புள்ள" என்றார். தொட்டிலில் இட்டு ஆராரோ பாடியவளுக்கு இன்று யார்யாரோ சோறு போடுகிறார்கள். நிலவைக்காட்டி சோறு ஊட்டியவளுக்கு, இன்று கண்பூத்து நிலவு போல் வெளுத்து விட்டது. முதல் முதலில் பள்ளியில் மகனைச் சேர்க்கும் போது மற்றப் பிள்ளைகட்கு மிட்டாய் கொடுத்த அன்னைக்கு, இன்று மரத்தடியே சொத்தாகிவிட்டது. பையன் படிக்கனும், நல்ல வேலைக்குப் போகனும், கல்யாணம் ஆகனும் என்று கோவில் குளம் சுற்றி வந்து, உண்டியலில் சில்லரைகளைக் கொட்டிய தாய், இன்று வீதியில் போவோர் எறியும் சில்லரைகளைச் சேர்த்தெடுத்து வாழ்க்கை நடத்துகிறாள்.

எமனுடன் போராடும் அனாதைக்கிழவி வந்து அம்மா இன்னும் நீ பத்து நாள் கூட இருக்க மாட்டேன்னு நினைக்கிறேன். உன் பிள்ளைக்கிட்ட நான் போய் என்ன சொல்லட்டும் என்று கேட்க அவள் சொன்னாள். பெயரிடப்படாத அவனை என் கருவில் சுமந்தபோது கண்ணே, மணியே என்று அழைத்து களித்தேன். பிறந்த பிறகு அவன் தந்தையும், உறவினரும் அவனுக்கு பெயரிட்டனர். அவன் பெயரை என் கல்லறை மீது எழுதி வைத்தால் அந்தப் பெயரை சுமப்பதில் பெருமகிழ்ச்சி அடைவேன் என்றாள். கருவறையில் சுமந்ததினும் பெரிதுவந்தாள் மகனின் பெயரை கல்லறையில் சுமக்க விழைந்த தாய்.



**K.N. உமாபதி**
K.K. நகர், சென்னை
95518 49757

# DEEPAM TRUST - Donation Form

After Reading the Social Activities of Deepam Trust, I would like to Donate a sum of Rs...................by cheque / demand draft / money order / bank transfer towards the following social activities.

**1) Annadanam** ☐ **2) Rice** ☐ **3) Provisions** ☐

**4) Education** ☐ **5) Medical Help** ☐ **6) Building Fund** ☐

Name : Dr / Sri / Smt / Kumari ..........................................................

Address ..........................................................................................

City...................................State...........................Pin...........................

Mobile :.................................Email....................................................

Birth Day................................Wedding Day.........................................

Deepam Trust was referred by : .......................................................

Donor's signature..............................Date :......................................

==========================================================

1st Time Donor: (Please tick) ☐ Already Donated : ☐

Do you get our Newsletter **"DEEPA NERI"** ? - Yes / No ( Pl. tick )

==========================================================

For Money Transfer : DEEPAM TRUST
State Bank of India, IIT Branch
Current A/c No. : 30265475129 / IFS Code : SBIN0001055

==========================================================

Note : Demand Draft / Cheque in favour of **"Deepam Trust"**
Address ; Deepam Trust, No. 30, Droupathi Amman koil Street,
(Next to Mosque), Velachery, Chennai - 600 042 Phone : 044 - 2244 2515
Cell : +91 94440 73635 www.deepamtrust.org

**DONATIONS ARE EXEMPTED UNDER 80G OF INCOME TAX**

# சென்னை வேளச்சேரி
# நித்ய தீப தருமச்சாலையில் தினசரி இரவும் பகலும் மக்களின் பசி போக்கும் தருமச்சாலை காட்சிகள்.













**சென்னை ரோட்டோரங்களில், நடைபாதைகளில், பாலங்களுக்கு அடியில், மர நிழலில் ஆதரவற்று வாழும் மக்களுக்கு உணவு பொட்டலங்களும், தண்ணீர் பாட்டில்களும் வழங்கும் சமுதாயப் பணி.**














# தைப்பூசம் என்றால் என்ன? !

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது சான்றோர்களின் வாக்கு ... ஆதிகாலத்தில் இருந்து இன்றுவரை மனித குலத்தின் பசியைப்போக்கும் உயர்ந்த சிறப்பான கண்ணியம் மிக்க தொழிலே விவசாயமாகும்.

மேலும் "ஏர் பின்னது உலகம்" என்பர். எல்லா உயிர்களின் பசியைப் போக்கும் சிறப்பான சிறந்த அதிக லாபம் நோக்கம் இல்லாத உலகப் பொதுத் தொழில் விவசாயமாகும் அந்த விவசாயத்திற்கு முக்கியமானது விதைப் பொருள்கள் ஆகும். விதைகளை விதைக்கத் தகுதியான மாதம் தை மாதமாகும். உலக உயிர்களின் வாழ்க்கை நலன் கருதி இயற்கை தந்த காலநிலை பருவமாற்றங்கள் யாவும் தைமாதத்தில் இருந்து தொடங்குவதால் தை பிறந்தால் வழிபிறக்கும் என்பது பொருத்தமான வார்த்தையாகும்

இறைதொடர்பு ! அதேபோல் ஆன்மீகத்தில் உயர்ந்த அறிவுபெற்ற மனித ஆன்மாக்களையும் பக்குவபடுத்தி இயற்கை உண்மைக் கடவுளான அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைத் தொடர்பு கொண்டு பொருளைத் தவிர்த்து அருளைப் பெறுவதற்கு சிறப்புடைய நாள் தைமாதத்தில் வரும் தைப்பூசத்திருநாளாகும்.

தைப்பூசம் என்றாலே தத்துவமான முருகக் கடவுளை வழிபடுவதற்குச் சிறந்த நாளாக தைப் பூசநாளைத் தேர்வு செய்து வழிபட்டுக்கொண்டு வருகின்றனர்.

அவற்றை மாற்றி உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு இயற்கை உண்மைக் கடவுள் யார்? என்பதை உலக மக்களுக்குத் தெரியப்படுத்தி அக்கடவுளின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தவே கடலூர் மாவட்டத்தில் உள்ள வடலூரில் சத்திய ஞானசபையைத் தோற்றுவித்துள்ளார் வள்ளலார்.

பூசம் என்றால் நிறைவு மகிழ்ச்சி ஆனந்தம் என்பது பொருளாகும் ஏன் என்றால் அதாவது சத்துள்ள சித்துப் பொருளைப் பெற்று ஆனந்தம் அடைவதாகும்.

உயர்ந்த அறிவு பெற்ற மேல்நிலைப் பிறப்பாகிய மனிதப்பிறப்பு பெற்றுள்ள ஜீவர்களை மீண்டும் பிறப்பு இறப்பு இல்லாமல் நித்தியமான பேரின்ப சித்தி பெருவாழ்வு வாழ்வதற்கு அருளை வழங்க வேண்டும். அருள் வழங்குவதற்கு தகுதியான கடவுள் ஒருவரே! அவரே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்ற தனிப்பெருங்கருணை அருள் ஒளியாகும். அவர் வருடம் ஒருமுறை உலகிற்கு நேரிடையாக வருகைத்தரும் நாளே தைப்பூசத் திருநாளாகும். அவரிடம் மக்கள் அருளைப்பெறும் வாய்ப்பு இல்லாமல் மறைக்கப்பட்டு உள்ளதால் அவருக்கு என தனிஇடம் வடலூரில் அமைத்தவர் வள்ளலார். இவ்வுலகில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வருகைப்புரிந்து அருள் ஆட்சி செய்யும் இடமாக அமைத்த இடமே வடலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபையாகும். பக்குவம் அடைந்த ஆன்மாக்கள் அருளைப்பெற்று மரணம் இல்லாப் பெருவாழ்வு வாழவும். பக்குவம் அடையாத ஆன்மாக்கள் பக்குவம் அடையவும் "வருவார் அழைத்து வாருங்கள் வடலூர் வடதிசைக்கே வந்தால் பெறலாம் நல்ல வரமே" என்று வாயே பறையாய் அறைகின்றார் வள்ளலார். அருள் வழங்கும் ஒரே இடம் வடலூர் சத்திய ஞானசபையாகும்.

வள்ளலார் பாடல்!

அருளாளர் வருகின்ற தருணம்இது தோழி
ஆயிரம் ஆயிரங்கோடி அணிவிளக்கேற் றிடுக
தெருளாய பசுநெய்யே விடுக மற்றை நெய்யேல்

திருமேனிக் கொருமாசு செய்தாலும் செய்யும்
இருள் ஏது காலை விளக் கேற்றிடவேண் டுவதோ
என்னாதே மங்கலமா ஏற்றுதலாங் கண்டாய்
மருளேல் அங்கவர் மேனி விளக்கமது என் கடந்த மதி
கதிர் செங் கனல் கூடிற் றென்னினும்சா லாதே.!

ஆயிரம் ஆயிரம் கோடி அணிவிளக்கு ஏற்றினாலும் அருளாளர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருமேனிக்கு ஈடு செய்ய இயலாது. மேலும் அக்கினி சூரியன் சந்திரன் நட்சத்திரம் போன்ற ஒளிகள் சேர்ந்தாலும் அவர் ஒளிக்கு ஈடு ஆகாது ஆனாலும் அவருடைய அருள் ஒளியின் அடையாளமாக அதாவது மங்களயமாக தைப்பூச ஜோதி தரிசனம் வெளிமுகமாய் காட்டப்படுகிறது என்பதே உண்மையாகும் அதேபோல் நம் உடம்பின் சிரநடு சிற்சபையில் ஆன்ம ஒளியாக (சிற்றணு பசுவாக) இயங்கிக் கொண்டு உள்ளவரே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகும்.

இயற்கை உண்மைக்குப் புறம்பாகிய சாதி சமய மதக் கொள்கைகளில் பற்று வைக்காமல் ஜீவகாருண்யமும் உயிர் இரக்கமுமே கடவுள் வழிபாடு என்பதை அறிவால் அறிந்து இந்திரிய கரண ஜீவ ஆன்ம ஒழுக்கத்தை முழுமையாக கடைப் பிடிப்பவர்களுக்கு மட்டுமே உடனடியாக அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அருளை வழங்கி தன்னுடன் அணைத்துக் கொள்வார் என்பதே சத்திய வாக்காகும்.

வள்ளலார் பாடல்!

சத்தியவான் வார்த்தைஇது தான் உரைத்தேன் கண்டாய்
சந்தேகம் இலைஇதனில் சந்தோடம் உறுவாய்
இத்தினமே அருட்சோதி எய்துகின்ற தினமாம்
இனிவரும் அத் தினங்கள் எலாம் இன்பம்உறு தினங்கள்
சுத்தசிவ சன்மார்க்கம் துலங்கும் எலா உலகும்
தூய்மைஉறும் நீஉரைத்த சொல்அனைத்தும் பலிக்கும்
செத்தவர்கள் எழுந்துலகில் திரிந்துமகிழ்ந் திருப்பார்
திருவருட்செங் கோல் எங்கும் செல்லுகின்ற தாமே.!

வள்ளலார் சொல்லிய வார்த்தைகள் யாவும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஆணையினால் வள்ளலார் மூலமாக வெளிப்படுத்தும் வார்த்தையாகும். எனவே சந்தேகம் இல்லாமல் சந்தோஷமாக இருங்கள். தைப்பூசத் திருநாளான இத்தினமே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் எழுந்தருளி அருள் வழங்கும் திருநாளாகும். இனி வரும் நாட்கள்யாவும் இன்பம் அடையும் நாட்களாகும். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் தனிப்பெருங்கருணை உண்மை அறியாமல் இறந்தவர்களையும் எழுப்பி மீண்டும் உயர்ந்த மனிதப்பிறவி கொடுத்து சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடைகளாகிய சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆச்சார சங்கற்ப விகற்பங்கள் மக்கள் மனதில் பற்றாத வண்ணம் அருள் செய்வார்.

மேலும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையை மக்கள் மனதில் மலரச்செய்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வளவும் தடைபடாமல் நிறைந்து விளங்க செய்வதற்கு அருள்செய்வார் என்பதையும் தெளிவு படுத்துகின்றார்.

எனவே தைப்பூசம் என்பது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வள்ளலாருக்கு அருளை வழங்கி ஊன் உடம்பை ஒளி உடம்பாக மாற்றிய திருநாளாகும் நாமும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைத் தொடர்புகொண்டு அருளைப் பெறுவோம்.

***எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !***
***கொல்லா நெறியில் குவலயம் எல்லாம் ஓங்குக !***



அன்புடன் ஆன்மநேயன்
**ஈரோடு கதிர்வேல்**
+91 9865939896

# இடது கை



வலது கை கொடுப்பதை இடது கை அறியாமல் இருப்பது தருமம். தீபம் அறக்கட்டளையென்னும் நிலைக் கண்ணாடியில் நீங்கள் கொடுத்த தருமத்தை இடது கை என்ன செய்தது என்பதைக் கண்ணாடி காட்டுகிறது.

## அரசு பதிவு செய்யப்பட்டு கடந்த 15 ஆண்டுகளில் ...

| | |
|---|---|
| உங்களால் பசிக்கு உணவு பெற்றவர்கள் | 1 கோடி பேருக்கும் மேல் |
| வசதி குறைந்த காப்பகங்கள், தானே / வர்தா புயல் நிவாரணம், / கஜா புயல் போன்றவற்றிற்கு நீங்கள் தந்த அரிசி | 70 டன் |
| உங்களால் கல்வி உதவி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை ஜுலை 2021 வரை | 1106 பேர் |
| நீங்கள் அளித்த கல்வி உதவித் தொகை | ரூ. 61,35,226 /- |
| மார்கழி மாதக் குளிரில் சுருண்டு பரட்டை தலையுடன் சாலையோரம் தரையில் படுத்திருந்தவர்களைப் பாதி இரவில் எழுப்பி நீங்கள் அளித்த போர்வைகள் மற்றும் புத்தாடைகளின் எண்ணிக்கை | 20,000-க்கும் மேல் |
| ஏழைகளின் நோய் தீர மருத்துவ உதவியாக நீங்கள் வழங்கிய தருமம் | ரூ. 50 லட்சத்திற்கும் மேல் |
| தீபநெறி மாத இதழ் உங்களால் வெளியிடப்படுவதை விரும்பிப் பெறுவோர் / பயனடைவோர் | இதுவரை 7,00,000 பிரதிகள் |

**கடந்த 24 மாதங்களில் கொரோனா காலத்தில் மட்டும் தினசரி 100 கிலோ அரிசி வீதம் மாதம் 3000 கிலோ வீதம் இதுவரை 70 டன் அரிசியில் மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து மகிழ்கிறோம்.**

---

**பணம் கொடுத்தது - உங்கள் வலது கை**
**புள்ளி விவரம் தருவது - உங்களது இடது கை (தீபம் அறக்கட்டளை)**

---

## தருமம் செய்வோம்! தயவுடன் வாழ்வோம்!!

# தைப்பூசத்தை முன்னிட்டு வடலூர் சத்ய தருமச்சாலையில் சன்மார்க்க அன்பர்களின் பசியை போக்க தொடர்ந்து 3 நாட்கள் தொண்டு செய்த தீபத்தின் திருத்தொண்டர்கள்












**சென்னை வேளச்சேரி நித்ய தருமச்சாலையில் 7 திரை நீக்கிய ஜோதி தரிசனம் மலர் அலங்காரத்தில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். நாள் முழுவதும் சிறப்பு உணவு வழங்கப்பட்டது.**









# வள்ளலார் நோக்கில் வள்ளுவம்

அறிவு என்பதே மெய்ப்பொருளினை அறியக்கூடியது ஆகும். இங்கே அறிவு என்பது ஞானத்தைக் குறிக்கும்.

வள்ளல் பெருமான், அறிவை எட்டு வகையாகப் பிரித்து நமக்கு உணர்த்தியுள்ளார். இந்திரிய அறிவான மெய், வாய், கண், மூக்கு, செவி வழியே காணும் ஐந்து அறிவு. கரண அறிவு என்கிற 6-ஆவது அறிவு; ஜீவ அறிவு என்கிற உயிர் அறிவு 7-ஆவது அறிவு; அடுத்து ஆன்ம அறிவு என்கிற ஞானம் 8-ஆவது அறிவு. இந்த 8-ஆவது அறிவான ஆன்ம அறிவு மூலமே ஒரு பொருளின் உண்மையை உணரமுடியும். அதாவது உண்மைப் பொருளை மெய்ப்பொருளை ஆன்ம அறிவு மூலமே உணரமுடியும்.

வள்ளல் பெருமான், அதனால்தான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருக்கு அறிவுக் கோயிலாக, ஞான சபையை வடலூரில் கட்டி, ஜோதி என்கின்ற ஆன்மாவின் உள்ளொளியை ஜோதி தரிசனம் செய்ய, ஞானத்திற்கு முக்கியத்துவம் அளித்துள்ளார்கள்.

திருவள்ளுவர், ஊக்கம் என்ற ஒரு பொருள் மட்டும் நமக்கு உடைமையாக இருந்துவிட்டால் வேறு எந்தப் பொருட்கள் இல்லாவிட்டாலும், அந்த ஊக்கத்தைக் கொண்டே அனைத்தையும் பெற்றுவிடலாம் என்பார்.

ஊக்கத்தைப் பெற்றவர் மாத்திரமே அனைத்தும் பெற்றவர். அந்தவகையில்தான் வள்ளல் பெருமான் அருட்பெருஞ்ஜோதி அகவலில்,

ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட்பெருஞ்ஜோதி

ஊக்கத்தையும், உணர்ச்சியையும் ஒளிதரும் உடலையும், ஆக்கமும் அருளியது அருட்பெருஞ்ஜோதி என்கிறார். ஊக்கம் மட்டும் இருந்தால், (அதாவது சோம்பலில்லாமல் தொடர்ந்து செயலாற்றும் தன்மை) மரணத்தையும் வென்று காட்டலாம். திருவள்ளுவர் ஆள்வினை உடைமை (முயற்சி) குறித்து,

முயற்சி திருவினை ஆக்கும் முயற்சியின்மை
இன்மை புகுத்தி விடும் - குறள், 616

முயற்சி இருந்தால் எவ்வளவு உயர்ந்த செயல்களையும், அதாவது மரணமிலாப் பெருவாழ்வு என்கின்ற இச்செயலையும் செய்து காட்டலாம். முயற்சி இன்மை என்கிறதே, அது இன்மை என்கின்ற மரணத்திற்குள் புகுத்திவிடும்.

எனவே எப்பேர்ப்பட்ட முன்னேற்றங்களையும் முயற்சியினால் மட்டுமே அடையமுடியும்.

இதனைத்தான் வள்ளல் பெருமான் அழியா தனி வடிவமான இறைவனின் வடிவை நாம் பெறவேண்டுமானால் இறைவனின் திருவருள் நமக்குத் தேவை, அப்படிப்பட்ட அருளைப் பெற முயற்சி செய் என்று இறைவனே தனக்குக் கூறி அருளினார் என்கிறார். இறை அருளைக்கூட இந்த முயற்சி என்கிற ஆள்வினை உடைமை மூலம் பெற்றுவிடலாம் என்றால் முயற்சியின் அளப்பரிய சிறப்பை அறிந்துகொள்ளலாம்.

அதனால்தான் திருவள்ளுவர், தெய்வத்தாலேயே முடியவில்லை என்றாலும் நம் முயற்சியின் மூலம் கடவுளையே நம் பக்கம் திருப்ப முடியும் என்கிறார்.

*தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்*
*மெய்வருத்தக் கூலி தரும் - குறள், 619*

நல்ல பண்பு இல்லையென்றால், அறிவுள்ள மேதையாக இருந்தாலும் மரத்துக்கு ஒப்பானவராக கருதப்படுவர். பண்பு என்பது மக்களுக்கு இயல்பாகவே இருக்கக்கூடியது. அதனால்தான் மக்கள் பண்பு என்பார் திருவள்ளுவர். மக்கள் பண்பு இல்லாதவர் மரம் போல்வர் என்பார். அரம் போன்ற கூர்மையான அறிவுடையவராக இருப்பது சிறப்பல்ல, மக்கள் பண்போடு இருப்பதுதான் சிறப்பு.

*அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்*
*மக்கட் பண்பில்லா தவர். - குறள், 997*

வள்ளல் பெருமான் இந்தப் பண்பு நலத்தின் மேன்மையைப் பாங்குற பல இடங்களில் எடுத்துக்காட்டியுள்ளார்.

பண்பாளர்களாக மனிதர்கள் மாறிவிட்டால் வானவர் ஆகிவிடலாம் என்பார் வள்ளலார்.

*மலங்கழிந்து உலகவர் வானவர் ஆயினர்*
*வலம்பெறு சுத்த சன்மார்க்கம் சிறந்தது*
*பலம்பெறு மனிதர்கள் பண்புளர் ஆயினர்*
*நலம்பெறும் அருட்பெருஞ் சோதியார் நண்ணவே*

- திருவருட்பா

உலகர்களின் ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மலங்கள் விலகவும், சுத்த சன்மார்க்கம் வலிமை உறவும், மனிதர்கள் பலம் பெறவும், பண்பு கொண்டதனால் நடைபெறுகின்றன. பண்பு ஒன்றே வானவர் நிலைக்கு நம்மை உயர்த்துகிறது.

திருவள்ளுவர், நாணுடைமை அதிகாரத்தில்,
பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி என்னும் உலகு

நாம், செய்யும், எண்ணும் செயலால் வரும் பழிச்சொல்லிற்காகவும், அதேபோன்று பிறருக்கு ஏற்படும் பழிக்காவும் வருந்தி நாணம் அடைய வேண்டும், வெட்கப்படவேண்டும். அப்படிப்பட்ட நாணத்தை உயடைவர்களே, நாணத்தை உடைமையாகப் பெற்றிருக்கிறார்கள் என்று பெயர்.

நாணம் அடைந்தால் மட்டும் போதாது, பின்னரும் நாணம் அடையத்தக்க, பழி ஏற்படத்தக்க செய்கைகளை செய்யாதிருத்தல் வேண்டும். வள்ளல் பெருமான், கரணம் என்று சொல்லப்படும் மனக்குரங்கின் காரணமாகவே பழி ஏற்படக்கூடிய, நாணம் அடையக்கூடிய செயல்களை நாம் செய்துவருகிறோம். எனவே, நாம் நாணம் அடையாதிருக்க வேண்டுமானால் இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம் ஆகியவற்றில் உயர்நிலையை அடைந்து சன்மார்க்கநெறியை உளமாரப் பின்பற்றினால் நாணம் கொள்ள வேண்டிய நிலையே எழாது.

**குறித்துரைக்கின்றேன் இதனைக் கேண்மின்**
**இங்கேவம்மின்கோறும் மனக்**
**குரங்காலே நாணுகின்ற உலகீர்**
**வெறித்த உம்மால் ஒருபயனும் வேண்டுகிலேன்எனது**
**மெய்யுரையைப் பொய்யுரையாய்வேறு நினையாது,**
**பொறித்த மதம் சமயம் எலாம் பொய் பொய்யே அவற்றில்**
**புகுதாதீர் சிவம் ஒன்றே பொருள் எனக் கண்டறிமின்**
**செறித்திடு சிற்சபை நடத்தைத் தெரிந்த**
**துதித்திடுமின் சித்திஎலாம் இத்தினமே**
**சத்தியம் சேர்ந்திடுமே மரணமிலாப் பெருவாழ்வு,**

*திருவருட்பா*

இப்படி, இந்திரிய, கரண ஒழுக்கங்களால் பிறர் பழிக்கும் செயல் செய்யாமல் இருந்தால் மட்டுமே, மரணமிலாப் பெருவாழ்வு பெறமுடியும். மனக்குரங்கின் வசப்பட்டுப் போனால் பிறர் பழிக்கும் செயல் மட்டுமே செய்ய முடியும். எனவே நாணவேண்டிய செய்கைகள் எதனையும் செய்யாமல், சுத்த சன்மார்க்கப் பெருநெறி மாண்பினைப் பெற்று செயலாற்றி மரணமிலாப் பெருவாழ்வையும் வசப்படுத்திக் கொள்ளவேண்டும் என்றுதான் வம்மின் என்று வள்ளல் பெருமான் அழைக்கின்றார்.

“தன்னூன் பெருக்கத்திற்குத் தான்பிறி தூனுன்பான் எங்ஙனம் ஆளும் அருள்“ தன்னுடம்பைப் பெருக்குவதற்கு வேறொரு உயிரின் உடலை வெட்டிச் சாய்த்து உண்பான். ஆனால் அப்படிப்பட்டவனுக்கு எப்படி அருள் வாய்க்கும் என்கிறார். திருவள்ளுவர்

புலால் உண்பவர்களுக்கு அருள் வாய்க்காது. அருளை நாம் உடைமையாகக் கொண்டால் மட்டுமே இறையருளைப் பெறமுடியும், ஆண்டவன் அருளைப் பெற்றால்தான் மரணமிலாப் பெருவாழ்வு பெறமுடியும். அதற்கு அருள் தேவை. அருள் கிடைப்பதற்குத் தடையாக உள்ளது பிற உயிரைக் கொல்வதும், பிற உயிரின் உடலை உண்பதும் ஆகும். அதனால்தான் வள்ளல் பெருமான் ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் முதன்மையாக நமக்குக் கூறிய கொல்லாமையும், புலால் உண்ணாமையும் ஆகும்.



செந்நெறி **பா. தண்டபாணி**
அரும்பாக்கம்
+91 73585 28467

# தினசரி மக்கள் பசி போக்கும் மனித நேயப் பணியில் தீபத்தின் திரு தொண்டர்களும், நித்ய தீப தருமச்சாலையும்










# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா

## 60. உன்னும் உணர்வு கடந்தது

**119. உறுமுணர் உணர்வாய் உணர்பெலாம் கடந்த**
**120. அனுபவா தீத அருட்பெருஞ்ஜோதி**

(உ–வி.) ஜீவர்களுக்குப் பொதுவாக விளங்குகின்ற உணர்வு, உயிர் என அறிகின்றோம். இந்த உயிர் உணர்வு, அக உயிர் நிலையையும், புறத்தேகத்தையும் பொருத்தி நின்று விழிப்பில் புலன் உணர்வுக்குக் காரணமாயும், உறக்கத்தில் அல்லது மயக்கத்தில் ஒடுங்கியும் கிடக்கின்றதாம். பொறி புலன் வளர்ச்சியுறாத தாவரங்களில் உயிர்ச்சக்தி இருந்தும், பிற ஜீவர்களிடத்தில் போன்று உணர்ச்சி வெளிப்பட விளங்குகின்றதில்லையாம். இதனால் தாவரஜீவர்கள் ஜீவஹிம்சையால் துன்பத்தை அடையா. மற்ற உயிர்கள் உயிர்வதையால் உபாதை அடைகின்றனவாம். இதனால் உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் கூடாது என்பது சன்மார்க்கக் கொள்கையாம். பிற எல்லா உயிர்களையும்விட மக்களினத்தில், ஐம்புலன் அறிவுக்கு மேற்பட்ட ஆறாவதாகிய மனோ உணர்வு விளங்குகின்றதால், இன்பதுன்பானுபவம் அதிகம் உறுத்துகின்றதாம். மனிதனே துன்பத்தால் பலகாலம் நினைந்து நினைந்து வருந்திப் புலம்பிக் கொண்டிருப்பதும், இன்பத்தால் மகிழ்ந்து கொண்டாடிக் கொண்டிருப்பதும் காண்கின்றோம்.

மனிதனின் மன உணர்வுக்கு விஷயங்களைப் பகுத்தறியவும், நினைவில் தொகுத்தறியவும், யூகித்தறியவும், ஓர்மையினால் ஆய்ந்து உண்மைகளைக் கண்டு அறியவும் முடிகின்றதாம். இவ்வறிவாற்றலைத் தான் சிந்தனையாக மொழிவர். இச்சிந்தனையே இங்கு உ(ன்)னும் உணர்வாகக் குறிக்கப்பட்டுள்ளதாம். சிந்திக்கின்ற மன உணர்வே உன்னும் அல்லது நினைக்கும் எண்ணமாக உரைக்கப்படுவது. இம்மனம் ஒன்றை மேலெழுந்தவாரியாகக் கண்டு உணர்தல் புத்தியாம். அந்த ஒன்றைக் கூர்ந்து நோக்கி, அது இதுதான் வேறு அல்ல என்று தெளிவுறும் உணர்வுதான் சித்தமாகும். அப்படித் தெளிவுறத் தெரிந்துகொண்ட ஒன்றை உண்மையானது என உளத்தில் பதித்ததுக் கொண்டு (அதற்கு உள்ளீடான இறை இயலை அறிந்து கொள்ளாதிருத்தல்) நிச்சயித்திருப்பது அகங்காரபோதம் என்னும் உணர்வாம். இப்படி உன்னுகின்ற உணர்வுக்கு எல்லாம் முதலாய் இருப்பது மனமே. இந்த மனத்தில் அகங்காரபோதம் இருக்கும்வரை கடவுள் உண்மை வெகுளியாகாது. இவ்வுணர்வு நிலையும் கடந்து மேல் சென்றால்தான் இறையனுபவம் விளங்கும்.

ஒருவனை. தானும் தன் நினைவும் கடவுளின் அருள்வண்ணமாக இருப்பதைத் தேக கரண உணர்வுக்கு அப்பால் நின்று அறியும் உணர்வே அருள் உணர்வாகும். இவ்வருள் உணர்வு இப்படிப்பட்டது என எடுத்துக்கூறக் கூடாததாய் இருப்பதால், அனுபவாதீதம் என்பர். இதனை அந்த அதீதநிலை நின்று ஒருவன் தானே அனுபவிக்கும்போது, அதுவே அதீதமான இறையனுபவமாக விளங்குகின்றதாம். அப்படி அனுபவத்தில் பெற்ற இறையுண்மையே இங்கு அருட்பெருஞ்ஜோதியாக உரைத்துள்ளார். நம் பெருமானார். உன்னும் உணர்வு அருளில் கரைந்து போகும்போது, தான் என்பதும் பிற என்பதும் மறைந்து, அந்த அருள் ஒளிஒன்றே யாவுமாய் விளங்குகிறதென்றே அறியப்படும். இதுவே அந்த இறையனுபவநிலையாம். இவ்விறை இயல் விளங்காதவரை, அகங்கார போத உணர்வும், ஒன்றன் புற வண்ண எண்ணமும் மறைவதே இல்லையாம். உண்மையாக யாவையும் அருட்பெருஞ்ஜோதியாய்க் காண்பதுதான் அந்த அதீத அனுபவநிலை எனப்படுகின்றதாம்.

# இதுதானா வாழ்க்கை?

யாரிடம் ஐயா, இந்தக் கேள்வியை கேட்கிறீர்? நீர் வாழ்வதும் வாழ்க்கைதானே! அதிலேயே உமக்கு சந்தேகம் எழுந்துவிட்டதா? அந்தோ பரிதாபம்!! உமக்குத் தேவையான உணவு கிடைக்கிறதா? கிடைக்கிறது ஆனால் உணவு கிடைக்காதவர்கள் ஏராளமாக உள்ளனரே! உமக்கு வசதியான உறையுள் உள்ளதல்லவா உண்மைதான். வெப்பத்தையும், கடுங்குளிரையும் எதிர்கொள்ளும் வசதிகளோடு இருக்கும் உறைவிடம் தான் எனது இருப்பிடம்.

ஆனால் தெருவோரம் ஒதுங்க நிழலின்றி தவிப்போர் எண்ணிக்கை குறையவில்லையே உமக்குத் தேவையான உடைகள் உள்ளதல்லவா? உடைகள் மட்டுமல்ல, உறவு, சுற்றம், நட்பு, உடல் நலம், மனநலம் அனைத்தும் உள்ளன.

இவை அனைத்தும் இருந்தும், உமக்குப் போதும் என்ற மனப்பக்குவம் இல்லையோ? அதிருப்தி மனப்பாங்கு தான் உமக்குக் குறைபாடு என்று தீர்ப்பு வழங்கிவிட்டீர்கள் அல்லவா?

செய்யாதன செய்யோம் - நம் கருமம் - நம் கடமை - மட்டுமே செய்வோம். அவம் செய்வோம் - குற்றமேதும் செய்யோம் - குறைகள் சொல்லமாட்டோம் - புறம் கூற மாட்டோம் பிறிதின் நோயை தன் நோயாக உணர்வோம். ஐயமும் பிச்சையும் ஆத்தனையும் அளித்திடுவோம்.

இப்படி வாழ்வதுதானே வாழ்க்கை. இல்லை. எனக்கு கிடைக்கிறவைகள் அனைத்தும் எல்லோருக்கும் கிடைக்காதவரை நான் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வதாகக் கொள்ளமுடியாது. நோயில்லாமல், உடல் நலம், உள்ள நலம் இரண்டும் பெற்றவர்களாகப் பெரும்பான்மையோர் இருந்திடவேண்டும் என்று விரும்புவது நம்மால் இயலாது - ஏனென்றால் அது இயலாத இலக்கு என்று தன் நலம் பற்றியே சிந்தித்தது, செயலாற்றும் வாழ்க்கை ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையே அல்ல.

**எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லால்**
**வேறொன்றும் அறியேன் பராபரமே**
**நினைத்திட்டால் போதுமா?**
**வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்**
**மண்ணுலகில் உயிர்கள் தாம் படுந்துயரம் கண்டிடச் சகியேன்**

காணச் சகியாமையோ, உளம் நொந்து வாடுவதோ, எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவோ, துயரச் சேற்றில் உழல்வோர் தொகையைக் குறைத்திடவே இல்லையே!

எத்தனை கோடி இன்பங்கள் உன்னை சூழ்ந்து உள்ளனவே இவற்றை அனுபவிக்கத் தெரியாமல் புலம்புகிறாயே ! எனது புலம்பலுக்கான காரணங்களை கேளுங்கள் ஐயா. எத்தனை விதமான தாவரங்கள் ! தனக்கென வாழாமல் பிறர்க்குரியவைகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனவே! இவற்றில் பாதி இவன் பயிர் இடாமலே உருவானவை. இவனுக்கு வேண்டியவற்றை பயிரிடக் கற்றவன் அவைகளின் பயன் கருதா பண்பினைக் கற்றானா?

ஆலயங்கள் ஆயிரமாயிரம் - ஆகம விதிகள்படி கட்டி முடித்தான். ஆயிரமாயிரம் கடவுள்களையும் சிருஷ்டித்தான். ஒவ்வொன்றுக்கும் புராணம் எழுதினான். அற்புதமான சிலா ரூபங்கள் அமைத்தான்.

சோடோபசாரங்கள்- ஆறு கால பூஜைகள் - வழிபாட்டு முறைகள் கற்பித்து சிரத்தையோடு செய்தான் - செய்வித்தான் - செய்து கொண்டும் இருக்கிறான்.

யாகங்களும், ஹோமங்களும், இலட்சார்ச்சனைகளும், பிரம்மோற்சவங்களும், நித்ய கல்யாணங்கள், பிரதோஷ வழிபாடுகள் - சொர்க்க வாசல் திறப்பு - கார்த்திகை தீபம் - மாவிளக்கு, பழனியில் பூசம் - திருத்தணியில் காவடி - திருச்செந்தூரில் சூரபத்மனை வதம் செய்து, வரமளித்தல் - நாள் தோறும் திருவிழாக்கள் - திரள்கின்ற பக்தர் கூட்டம், சபரிமலையையும், ஏழுமலையையும் சேர்த்துக் கொண்டு கணக்கிட்டால் குறைந்தபட்சமாக நமது மக்களில் மூன்று கோடிக்கும் அதிகமாக பக்தர்கள் இருப்பது பெருமிதத்திற்குரியது தானே?

நேர்த்திக் கடன் காணிக்கைகள் : தங்களது பக்தியின் நன்றிக்கடனாக பக்தர்கள், தாங்கள் செல்லும் ஆலயங்கட்கு காணிக்கை செலுத்தும் பழக்கம் உள்ளதை அறிவீர்கள். பெறப்பட்ட காணிக்கைகள் எவ்வளவு என்று அவ்வப்போது ஆலய நிர்வாகிகள் அறிவிக்கின்றார்கள்.

குறைந்தபட்சமாக, ஊகித்தால், அந்தத் தொகை இரண்டாயிரம் கோடிகளைத் தாண்டுகிறது.

இத்தனை கோடி பக்தர்கள், இத்தனை நூற்றாண்டுகளாக சிரத்தையோடு செலுத்திவரும் பக்தியாலும் - காணிக்கைகளாலும் மனிதன் பெற்றது என்ன? உயர்ந்த மனிதர்கள், உருவாகி இருக்க வேண்டாமா? ஒழுக்க நெறிகள் நித்ய கடமைகளாக, இயல்பான குணங்களாக, சமுதாய மனநலன் மேம்பட்டிருக்க வேண்டாமா?

நான் ஆலய தரிசனங்கட்கு எதிர்ப்பானவன் என்றோ எதிர்மறை சிந்தனையாளன் என்றோ நினைத்துவிடாதீர்கள். சாஸ்திரங்களும், நீதி நூல்களும், சான்றோர்களும் மனிதனிடம் எதிர்பார்த்தது என்ன? அகத்தூய்மை - ஆன்ம பலம் - அறிவு விருத்தி - ஞானம்.

கோபுரவாயிலிலிருந்து, கர்ப்பகிருகம் வரை கட்டணம். ஆலயங்கள், வணிகவளாகங்களாக மாற்றப்பட்டு விட்டதாக ஐம்பது ஆண்டுகட்கு முன்னரே, பெரியவர், காஞ்சி முனிவர் தமது அருளுரையில் சொல்லி வருந்தினார்.

வேதங்களும், வேள்விகளும் விலக்கப்பட வேண்டியவை என்று இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகட்கு முன்னரே சொன்னவர் கௌதம புத்தர். பௌத்த மதம் நிறுவியவர். புத்த மதம் தழுவியோர், யாகங்கள் செய்யவில்லை - சிலைகள் வைத்து அபிஷேகங்கள் செய்யவில்லை. அவர்களும் சு பி க்ஷ மா க த் தா ன் இருக்கிறார்கள்.

வள்ளுவரும், தனது பொய்யா மொழியில் வேள்விகள் பற்றியோ, நான்கு மறைகள் பற்றியோ பேசவில்லை. அறத்திற்கு இலக்கணம் சொன்னார்- அரசனின் கடமைகளையும் அழகுறச் சொன்னார். இல்லறம் நல்லறமாகிட வழிகள் சொன்னார். மனிதனை மாமனிதனாக்கிடும் அத்தனை வழிகளையும் விளக்கினார்.

வள்ளலாரும் அபிஷேகங்களை ஆமோதிக்கவில்லை. பேரொலி எழுப்புதலை தவிர்த்து அமைதியாக, நினைந்து, நினைந்து நெகிழ்ந்து, நெக்குருகி வழிபடச் சொன்னார்.

அடியேனின் விண்ணப்பம் - நெரிசல் பக்தியை வழங்காது நிஷ்டை கைகூட வேண்டும் என்றால், பக்தி எனும் அர்ப்பணிப்பு உணர்வு உள்ளத்தை நிரப்பவேண்டும்.

காணிக்கைகள் செலுத்துவோர் கவனத்திற்கு ஒரு பாடல் திருமூலர் அருளியது - 12 நூற்றாண்டுகட்கு முன்னர்

**படமாடும் பரமனுக்கு ஒன்று ஈயில்**
**நடமாடும் நம்பர்க்கு அங்கு ஆகா**
**நடமாடும் நம்பர்க்கு ஒன்று ஈயில்**
**படமாடும் பரமனுக்கு அங்கு ஆமே !**

காணிக்கைகள் பற்றிய அறிவிப்புகள் செய்தித்தாள்களில் படிக்கும்போது என் மனதில், சில காட்சிகள் தோன்றும். கண்களில் நீர் ததும்பும். பச்சிளம் குழந்தைகள் - பால் மணம் மாறாத சிறார்கள்- வாடிய முகங்கள் - ஏக்கப் பார்வைகள் - குறைபாடுகளோடு பிறந்து விட்ட குழந்தைகள் - இவர்களையல்லவா நாம் ஆதரிக்க வேண்டும். அரவணைக்கவேண்டும்.

உங்கள் பக்தி சார்ந்த பணிகளை என்னால் ஆக்ஷேபிக்க முடியாது. ஆனால் சீராய்வு செய்யுங்கள் என்று விண்ணப்பிக்கலாம் அல்லவா?

உமது புலம்பல்களுக்கு இவைதான் காரணமா? இவைகளும் காரணங்கள் இன்னும் சில உள ! அகத்தே கறுத்து, புறத்தே புகழுக்குரியோராகவும், போற்றுதல் பெற்றிடுவோராகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அனைவரையுமா குற்றம் சாட்டுகிறீர்? ஆமாம் ! ஆமாம் !! நாம் அனைவருமே அகத்தே கறுத்து, புறத்தே புகழோடு வாழ்ந்திட போட்டி போடுகிறோம். உள் நோக்கிப் பாருங்கள். விளங்கும். அகத்துக் கறுப்பை, நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

புகைப்படலம் போன்று மெலிதாக படர்ந்திருக்கும் கறுப்பு முதல்வகை. இவர்கள் அகத்தில் படரும் கறுப்பு சில கணங்களில் விலகும். இரண்டாவது வகை, துகிலில் படியும் கறை போன்றது. நன்னீரால் கழுவினால் கறை நீங்கும். அறிவுரைகளால் அகலும் தன்மையது.

மூன்றாவது வகை - குற்றங்களை நியாயப்படுத்திக் கொண்டே தவறான செய்கைகளை தவிர்த்திட இயலாத பெரும்பான்மையினோர்.

நான்காவது வகை - அகற்றவே முடியாத, அகல மறுத்திடும் ஆணவக் கறுப்பு. ஒவ்வொன்றாக அடையாளப்படுத்துகிறேன். ஏற்க மறுப்போர், இதுதான் உலகம் - இதுதான் வாழ்க்கை என்று தனது எண்ண ஓட்டத்தை நியாயப்படுத்திக் கொண்டே, தொடர்வார்கள். தொடர்கிறார்கள்.

1. முதல் வகையினர் சொற்பம். சினம் வரும். கணமேனும் காத்திராமல், காருண்யம் கை கொடுத்து அவர்களைக் காத்திடும். ஆறுவது சினம் - அறம் செய விரும்புவோர் தான் முதல் வகையினர்.

2. இரண்டாவது வகையினர் - தானாகவும் தெரிந்து கொள்ளாமல், சொன்னால் - அறிவுறுத்தினால் புரிந்து கொள்ளக்கூடிய மிதவாதிகள். தவறை, தவறென்று தவிர்த்திடும் துணிவும் உறுதியும் இல்லாத இரண்டும் கெட்டான் பேர்வழிகள். இனிமேல், இதுபோன்ற செயல்களில் ஈடுபடமாட்டேன் - கறுப்புக்கு என் மனதில் இடங்கொடேன் என்று தீர்மானிப்பார்கள். ஆனால், உறுதியாக, அகக் கறுப்பை உதறிவிட இயலாதவர்கள்.

3. மூன்றாவது வகையினர் என் அகத்திலா கறுப்பு? நான் கள்ளம், கபடு அறியாதவன் - சூதுவாது தெரியாதவன். பிறன் பொருளைத்திருடியதில்லை - பிறரை வஞ்சித்ததில்லை - பிறர் மனை பேணியதில்லை. சூதாடியதில்லை - வாதப்பிரதிவாதம் செய்ததே இல்லை. குடும்பக் கடமைகளில் குறை வைத்ததே இல்லை. இப்படிப் பேசுவோர் தான் நம்மில் பெரும்பான்மையோர். இவர்கட்கு சில வினாக்கள். இவர்களை அடையாளப்படுத்திடத்தான் இந்த வினாக்கள் - விடை காணும்போது நீங்களும் அதில் ஒருவராக இருப்பது விளங்கும்.

பரம்பரை சொத்து என திரண்ட சொத்துக்களுக்கு

அதிபதிகளாகத் தலைமுறை தலைமுறையாக சொகுசு வாழ்க்கை வாழ்கிற செல்வந்தர்கள் பிறன் பொருளை அனுபவிப்பதாக நினைப்பதே இல்லையே ! ஏன்? இவ்வளவு செல்வமும் இவர்கள் உழைப்பாலா?? மன்னர்கள் காலத்தினின்று இன்று வரை தொடர்கின்ற மாற்றிடவோ, தவிர்த்திடவோ முனைந்திடாத ஒரு பழக்கம்.

சொத்துக்கு உரிமை கோரும் வழக்குகள் எத்தனை - உறவு முறிவு - அடிதடி - கொலை வெறி வரை நடந்து கொண்டுதானே இருக்கின்றன. இத்தகைய செல்வந்தர்கள் புகழோடும் பாராட்டுகளோடும் பவனி வந்து கொண்டுதானே இருக்கிறார்கள்.

என் கருத்து - தந்தை மகற்காற்றும் உதவி அவயத்து முந்தியிருக்க உதவுவது மட்டுமே - செல்வமும் - நிலமும் - வீடும் - தங்கமும் வைரமும் அல்ல. பேரறிவு + பேராற்றல் = பெருஞ்செல்வம் அபரிதமித சொத்துக் குவிப்புக்கு மூலதனம் பேரறிவும் பேராற்றலுமா? எளிமையும், தூய்மையும் ஏழையின் கூட்டாளிகளா வறுமைப் பிடியில் 25 வாடுவதன் காரணம்? ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவான் பேரறிவாளன் திரு பேரறிவாளன், பெருஞ்செல்வம் ஏன் சேர்க்க வேண்டும்? வள்ளுவர் காலத்தில் பில்கேட்ஸ், அமேஜான் அதிபரோ, அம்பானியோ இல்லை. இன்றைய உலக மக்கள் தொகை 720 கோடி - அன்று 10 கோடியாக இருந்திருக்கலாம்.

அபரிமித செல்வக் குவிப்புக்கு வாய்ப்பும், உச்ச கட்ட செல்வந்தனாக - உலகத்திலேயே பெரும் பணக்காரனாக ஆகிட வேண்டும் எனும் இலக்கு நிர்ணயித்து, அதை நோக்கியே பயணித்திடும் இன்றைய மனப்பாங்கு அன்று இருந்திருக்காது.

தனது தேவை போக, மிகுதியுள்ளதை ஊர் மக்களுக்கு உரித்தாக்கிடும் உன்னத பண்புதான் அந்த குறளின் பொருள்.

வள்ளுவர் மட்டுமா எழுதினார். எண்ணற்றோர் எழுதினர். எழுதினோம் . எழுதினோம். எழுதிக் கொண்டே இருக்கிறோம். எழுப்பப்பட வேண்டியவர்கள் எழவே இல்லை. ஏன்? நாம், கரை மீது நின்று கொண்டு, நீந்தக் கற்றுக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். நமது பாதுகாப்பை உறுதிசெய்து கொள்கிறோம். வழிந்தோடும் திரவியத்தில் ஒரு சிறிது அள்ளித் தெளிக்கிறோம்.

மேடுபள்ளங்களை சரி செய்து, சமநிலைதான் இலக்காக இருக்கவேணும்! அடியேனின் ஆவல் அவ்வளவு உயர்ந்ததல்ல? மலைக்கும் மடுவிற்குமான வித்யாசத்தை குறைத்து, அதிக சிரமமின்றி நடந்து செல்லும் பாதையை அமைத்திடலாமே!

மூன்றாவது வகை கறுப்பினம் (அகக் கறுப்பு) பற்றி சிந்திக்க உங்களுக்கு உதவிட ஒரு பட்டியல் தருகிறேன். சிந்தித்து விளக்கம் பெற ஒரு பயிற்சியாக மேற்கொள்ளுங்கள். வாணிபஞ் செய்வார்க்கு வாணிபம் பேணி பிறவும் தம்போல் செயின் வணிகம் ஒரு சிலரால் செய்த காலம் - பொருள்களும் , தேவைகளும் குறைவாக இருந்த காலம். நம்மில் பலர் அறியாதது அந்தக் காலம். இன்று, சர்வம் வணிகமயம் - விளம்பர மயம். உணவுப் பண்டங்களில், உடைகளில், உறைவிடங்களில் கல்வி நிலையங்களில், ஆலயங்களில், மருத்துவமனைகளில், உற்பத்தி ஆலைகளில், அரசோச்ச நடந்திடும் போட்டிகளில் கூட வணிகம், அங்கிங்கெனாதபடி ஆண்டவன் என்ற நம்பிக்கையையே தகர்த்து, விணகம் - கையூட்டு, அபிரிமித சொத்துக்குவிப்பு !! இந்த சூழலிலும் நிகழ்ந்து கொண்டிருக்கிற சில சாதனைகள் : நூறு கோடி செலவில் திருமணம் ஆகாய விமானத்தில் திருமணம் ஒரே நாளில் மது விற்பனை 273 கோடி நிகழ்த்தப்பட வேண்டிய சாதனை எது தெரியுமா? ஒரே ஒரு மனிதப் பிறவியும் ஆதரவில்லை என்று அழுது அரற்றிடாமல், அல்லல்பட்டு மடிந்திடாமல், பாதுகாத்திடல் தான், பராமரித்தல்தான் மகத்தான சாதனை ! முதன்மையாக மேற்கொள்ளப்பட வேண்டிய நற்பணி அதுமட்டுமே ! மூன்றாவது கறுப்பை அகற்றிட ஏதேனும் வழிகள் உண்டா? நான்காவது வகை கறுப்பு : அச்சுறுத்தும் கறுப்பு - அகல மறுக்கும் கறுப்பு - மனித குலத்தை அழித்துக் கொண்டிருக்கும் ஆணவக் கறுப்பு.

புரிகிறதா ? கொரானாவையோ, சுனாமியையோ, பெருமழை, பெருவெள்ளம், பனிப்பாறை உருகல் - நில அதிர்வுகள் எரிமலை சீற்றம் - இவைகளை நான் சொல்லவில்லை. மதத்துவேஷம் - இனத்துவேஷம் - ஆதிக்க வெறி - ஆண்டான் அடிமை செருக்கு - தேசப்பற்று - கடவுள் ஆணை என்று மனித வேட்டை ஆடிக்கொண்டே இருக்கிற ஐந்து அறிவை மட்டுமே கொண்ட விலங்கினங்கள் - கொடிய விலங்கினங்கள் போல உலா வரும் மனித மிருகங்களின் அகத்து கறுப்பு எப்போது மறையும்.

மூன்றாவது கறுப்பும் - நாலாவது கறுப்பும் உலக சமநிலைக்கு ஊறு விளைத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலும் தினப்பலன் சொல்லிக் கொண்டிருப்போரையும், கேட்டுக் கொண்டிருப்போரையும் என்னென்பேன்?

நிறையப் பேசிவிட்டேன் - கட்டுரை நீண்டுவிட்டது. புலம்பல்கள் இன்னும் உள்ளன. மிச்சத்தை பின் சொல்வேன். தீபநெறி பிரசுரிக்கப்பட்டால் என் வாழ்வு மீண்டும் உயிர்ப்படையும். தொடர்ந்து பேசுவோம் எனும் நம்பிக்கையோடு நிறைவு செய்கிறேன்.



**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
08056438488